செ.வெ.எண்:41 நாள்:23.02.2018

## பத்திரிக்கை செய்தி

## கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.கோவிந்தராஜ் அவர்கள் தகவல்

### சிறுபான்மையின மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் 2018–19 கல்வி நிலையங்களை தேசிய கல்வி உதவித்தொகை இணைய தளத்தில் இணைத்தல்

தமிழ்நாட்டில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் 1 முதல் 12ஆம் வகுப்பு, வாழ்க்கை தொழிற்கல்வி (Vocational), ஐ.டி.ஐ., ஐ.டி.சி., பாலிடெக்னிக், பட்டயப்படிப்புகள், இளங்கலை (ம) முதுகலை பட்டப்படிப்புகள், பொறியியல் மற்றும் மருத்துவம், எம்.பில்., ஆராய்ச்சிப் படிப்பு ஆகியவற்றை பயிலும் கிருத்துவர் / இஸ்லாமியர் / புத்த மதத்தினர் / சீக்கியர் / ஜைன் மற்றும் பார்சி மதத்தைச் சார்ந்த சிறுபான்மையின மாணவ / மாணவியர்களுக்கு பள்ளி படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் தகுதி (ம) வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் தேசிய கல்வி உதவித்தொகை இணையம் (National Scholarhsip Portal) www.scholarships.gov.in வாயிலாக மத்திய அரசின் மூலம் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இக்கல்வி உதவித்தொகை திட்டத்தில் பயன்பெற அனைத்து கல்வி நிலையங்களும் மேற்காணும் இணைய தளத்தில் பதிவு செய்திருப்பது அவசியமாகும். எனவே, இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களும், தேசிய கல்வி உதவித்தொகை இணையத்தில் பதிவு செய்துள்ளதையும், பயனீட்டாளர் குறியீடு (User-ID) பெறப்பட்டுள்ளதையும் உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. AISHE / UDISE எண் மற்றும் கல்வி நிலையத்தின் பெயர் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பின் அவ்விவரத்தினை உரிய ஆவணங்களுடன் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

AISHE எண் பெறாத கல்வி நிலையங்கள் மத்திய அரசின் www.aishe.nic.in என்ற இணையதளத்தில் ஆன்லைன் மூலம் பதிவு செய்து பெறலாம் எனவும், பள்ளிகளை பொறுத்தவரை UDISE எண்ணிற்கு முதன்மை கல்வி அலுவலவரை அணுகுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணையத்தில் கல்வி நிலையத்தினை பதிவு செய்வது தொடர்பாக கல்வி நிலைய முதல்வர் / தலைமையாசிரியர் / டீன் கோரிக்கை கடிதம் (சுய ஒப்பமிட்டது), தலைமையாசிரியர் / முதல்வர் / டீன் பெயர், மொபைல் எண் (அவசியம்), AISHE / UDISE எண், கல்வி நிலையத்தின் முழு முகவரி மற்றும் வேறு இதர விவரங்களுடன் (கோரப்படும் பட்சத்தில்) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் நல அலுவலரை உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கல்வி நிலையங்களை தேசிய கல்வி உதவித்தொகை இணையத்தில் (www.scholarships.gov.in) பதிவு செய்வதற்கான கடைசி தேதி 31.03.2018 ஆகும் எனவும், 31.03.2018 வரை இணைய தளத்தில் பதிவு செய்துள்ள கல்வி நிலையங்கள் மட்டுமே 2018–19ஆம் ஆண்டிற்கான கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தில் பயன்பெற இயலும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும், விவரங்களுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களை அணுகுமாறு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.கோவிந்தராஜ், இ.ஆ.ப. தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**